Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 04 விலை ரூபா: 4-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம்: 01 பெப்ரவரி (11 - 02 - 1991) திங்கட்கிழமை ஓசை: 358

## ஈழத்து நூல்கள் ஐநூறு கொள்வனவு செய்வோம்

(யாழ்ப்பாணம்) -டிவகலாலா

''ஜனசமூக நிலையங்களை ஊடகமாகப் பாவித்து ஒவ்வோர் ஈழத்து எழுத்தாளர்களின் நூல்களிலும் ஐந்நூறு பிரதிகளைக் கொள்வனவு செய்யும் திட்டத்தை அமுல் படுத்தவுள்ளோம்'' இவ்வாறு நேற்று 10-02-91 மாவலை நல்லூர் சம்பன்கோட்டத்தில் நடைபெற்ற 'செம்மை அழியான்' பாராட்டுக்கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையில் கூறினார். (4 ஆம் பக்கம் பார்க்க)

# நொச்சிமோட்டையில் புலிகள் இராணுவம் கடும் மோதல்

## விமானப் படையின் பலத்த குண்டுவீச்சு

(வவுனியா)

வவுனியா இராணுவ முகாமில் இருந்து காட்டு வழியாக வந்த சிறிலங்கா இராணுவத்தினருக்கும் புலிகளுக்கும் இடையில் நொச்சிமோட்டைப் பகுதியில் கடும் மோதல் ஏற்பட்டுள்ளதாக பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. மேலும், இராணுவத்தினருக்குத் துணையாக சிறிலங்கா விமானப்படை விமானங்களும், ஹெலிகொப்டர்களும் பரவலான குண்டுவீச்சுத் தாக்குதலில் ஈடுபட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

வவுனியா இராணுவ முகாமில் இருந்து காட்டுவழியாக வந்த இராணுவத்தினருக்கும் புலிகளுக்கும் இடையில் நொச்சிமோட்டைப் பாலத்துக்கருகில் கடும் மோதல் ஏற்பட்டுள்ளது. அதேவேளை அப்பகுதியால் சென்றுகொண்டிருந்த மினிபஸ் ஒன்றும் ஹெலிகப்டர் தாக்குதலுக்கு உள்ளானது.

தொடர்ந்து இடம்பெற்றுக் கொண்டிருக்கும் இம்மோதலின் சேத விபரம் எதுவும் இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை தெரியவரவில்லை.

## கட்டுநாயக்காவில் யாழ். வாசிகள் இருவர் கைது

(கொழும்பு)

போலிக் கடவுச்சீட்டுக்கள், போலி விசாக்கள் மூலம் லண்டனுக்குச் செல்ல முற்பட்ட யாழ். வாசிகள் இருவரைக் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து இரகசியப் பொலிஸார் கைது செய்துள்ளதாகப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த வாரம் பிரஸ்தாப தம்பதியர் விமான நிலையத்தில் இருந்து லண்டனுக்குச் செல்ல முனைந்த போதே கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்குப் போலி தஸ்தாவேஜுகளை வழங்கிய நபர் தலைமறைவாகியுள்ளதாகவும் தெரிய வருகிறது. (மு)

## இயக்கச்சி மீது ஷெல் தாக்கு

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து நேற்றிரவு ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. கரந்தாய்க்குளம் இயக்கச்சிப் பகுதிகளில் இவை வீழ்ந்து வெடித்தன. இத்தாக்குதலில் சேதம் எதுவும் ஏற்படவில்லையென அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## விமானக் குண்டுவீச்சிற்கு இருவர் பலி; மூவர் காயம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான இரண்டு குண்டுவீச்சு விமானங்கள் நேற்றையதினம் கொக்குவில், கல்வியங்காடு, உடுவில், சங்குவேலி ஆகிய பகுதிகளில் மேற்கொண்ட விமானத் தாக்குதல்களில் இருவர் பலியாகினர். மூவர் படுகாயமடைந்தனர். பாதுக்கும் மேற்பட்ட வீடுகளும், தனியார் வைத்தியசாலை ஒன்றும் சேதமடைந்துள்ளன.

நேற்றுக்காலை 10.30 மணியளவில் உடுவில் சங்குவேலிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட (4 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லையில் ஹெலி சூடு ஒருவர் பலி

(முல்லைத்தீவு)

முல்லைதீவு மாவட்டத்தில் உள்ள நெடுங்கேணி ஒலுமடுப் பகுதியில் நேற்று முன்தினம் ஹெலியிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதில் பொதுமகன் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

## ஒளிந்திருந்த இராணுவம் சூடு

## மகனை வீதியில் போட்டுவிட்டு ஓடோடி வந்தாள் தாய்

(யாழ்ப்பாணம்)

நொச்சிமோட்டை பாலத்தைச் சூழவுள்ள காட்டுப் பகுதியில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற பொது மக்கள் மீது திடீரென இராணுவத்தினர் தொடர்ச்சியாக துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்தனர். இத்துப்பாக்கி வேட்டில் சிக்கிய சிறுவன் ஸ்தலத்திலேயே துடிதுடித்து இறந்தான். மேலும் பலர் இராணுவத்தின் வேட்டுக்குள் சிக்கி உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

இக்கொடூர சம்பவம் பற்றி நேற்று இரவு வவுனியாவிலிருந்து திரும்பி யாழ்போதனா வைத்தியசாலைக்கு (4 ஆம் பக்கம் பார்க்க)

## சொய்ஸா கொலையை விசாரிக்க சர்வதேச ஆணைக்குழு தேவை

\- வாசுதேவா

(கொழும்பு)

பத்திரிகையாளர் ரிச்சர்ட் டி சொய்ஸாவின் கொலையை விசாரிக்கச் சர்வதேச ஆணைக்குழு நியமிக்கப்படவேண்டும் என ரிச்சர்ட் டி சொய்ஸாவின் கொலை தொடர்பாக நேற்று முன் தினம் பாராளுமன்றத்தில் நடந்த கூட்டத்தில் பேசிய (4 ஆம் பக்கம் பார்க்க)

## சிறுவன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

வீட்டுக் கோடியில் இருந்த பொருளொன்று திடீரென வெடித்ததில் சிறுவனொருவன் படுகாயமடைந்துள்ளான்.

ஏழாலையைச் சேர்ந்த நான்கு வயதான குணராஜா என்ற சிறுவனே இச்சம்பவத்தில் படுகாயமடைந்துள்ளான். வீட்டின் பின்புறத்தில் விளை(4 ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம்கள் சகல இனத்துடனும் சமாதானமாக வாழப் பழகவும்

\- அமைச்சர் ரஞ்சன் புத்திமதி

(காத்தான்குடி)

முஸ்லிம் மக்கள் சகல இனமக்களுடனும் ஐக்கியமாக வாழப்பழகிக் கொள்ள வேண்டும் என்று நேற்று காத்தான்குடியில் நடந்த கூட்டமொன்றில் சிறிலங்கா பாதுகாப்பு இணை அமைச்சர் ரஞ்சன் ஆலோசனை வழங்கினார்.

மேலும் அவர் பேசுகையில் காத்தான்குடி முஸ்லிம் மக்களுக்கு போதிய பாதுகாப்பு அளிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

## பரந்தன் தொழிற்சாலையை அம்பாந்தோட்டைக்கு மாற்ற முடிவு

(கொழும்பு)

பரந்தன் இரசாயன தொழிற்சாலையை அம்பாந்தோட்டைக்கு மாற்ற கைத்தொழில் அமைச்சு முடிவுசெய்துள்ளது.

கடந்த ஆறு ஆண்டுகளாக இந்தத் தொழிற்சாலை பரந்தனில் இருந்தும் இயங்குவதற்கு ஏற்ற சூழ்நிலை அந்தப் பகுதியில் ஏற்படாததால் உறங்கிய நிலையில் இருந்து வந்தது. இதனை காரணமாகவைத்தே இந்தத் தொழிற்சாலையை இடம் மாற்றத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (லோ)

## தட்டக்கல்லில் இராணுவம் மீது புலிகள் கிளைமோர்த் தாக்குதல்

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்தில் நேற்றுக் காலை சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் கிளைமோர்த் தாக்குதல் மேற்கொ[illegible]ன்டதில் இராணுவத்தரப்பில் பலத்த சேதமேற்பட்டது.

நேற்றுக் காலை 8.50 மணியளவில் [illegible] முகாமில் இருந்து குச்சவெளி முகா. (4 ஆம் பக்கம் பார்க்க)

## பண்டிகை முற்பணத்திற்கு முன்கூட்டியே தோட்டத் தொழிலாளரிடம் சம்பள வெட்டு

(பதுளை)

தோட்டத் தொழிலாளர் சம்பளத்தில் இருந்து முன்கூட்டியே பண்டிகை முற்பணம் அறவிடுவதற்கு அரசாங்கம் முடிவெடுத்துள்ளது. இதை ஆட்சேபித்து தோட்டத் தொழிலாளர் தமது சம்பளத்தைப் பெற மறுத்ததுடன், ஜனாதிபதிக்கும், தோட்டத்தொழிற்துறை அமைச்சருக்கும் அவசரத் தந்தியடித்துள்ளனர்.

பெருநாள் முற்பணம் வழங்குவதற்காக தோட்டத்தொழிலாளர்களின் சம்பளத்தில் இருந்து முன்கூட்டியே மாதாந்தம் 75ரூபா கழிக்கப்படுவதை ஆட்சேபித்தே தோட்டத் தொழிற் சங்கங்கள் சிறிலங்கா (4 ஆம் பக்கம் பார்க்க)

## தரைத்தாக்குதல் மேலும் ஒருமாத காலம் தாமதம்

(லண்டன்)

ஈராக்மீது தரைவழித் தாக்குதலை மேற்கொள்ள இன்னும் ஒருமாத கால அவகாசம் தேவை என அமெரிக்க தலைமையிலான கூட்டுப் படைகளின் தளபதிகள் தெரிவித்திருக்கும் அதேவேளை ஈராக்மீது மேலும் விமானத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படவேண்டும் எனவும் தெரிவித்ததாக ஏ. பி. இ. (4 ஆம் பக்கம் பார்க்க)

## விளம்பரம்

### வரலாறு

விற்பனையாகின்றது! வரலாறு- ஆண்டு: 11, வரலாறு- ஆண்டு: 6 ( புதியபாடத்திட்டம் ) ஆக்கியோன்: த. தர்மபாலன். சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். (R 1083)

### போட்டோஸ்ரட்

போட்டோஸ்ரட் பிரதிகளையும், றேனியோ பிரதிகளையும், தமிழ், ஆங்கில ரைப்பிங் வேலைகளையும், உடனடியாக பெற்றுக் கொள்ள "கிளின் சட்" 239, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (B-1994)

### மிக்வைற்
### திரவ சவர்க்காரம்
### (Liquid Soap)

வேப்பெண்ணெய் கைத்தடி ப. நோ. கூ. சங்கத்திலும் விற்பனைக்கு உண்டு. (B/1999)

### தவறிவிட்டது

மண்டைதீவு நிதிப்பத்திரம் இல. 12184 கனகரட்ணம் ம. மகா வித்தியாலயத்திற்கும் 4ஆம் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் உண்டு வ. தனி செல்வநாயகம், 29/1 கச்சேரி ஒழுங்கை, அரியாலை. (R-1096)

## அடையாளம் காட்டிப் பெறவும்

திருப்பதி நீர்வேலி தெற்கு நீர்வேலியைச்சேர்ந்த கே.எஸ். ஜயசுந்தரம் என்பவருக்குச் சொந்தமான ஒரு குடையுடன் சில ஆவணங்கள் பூநகரியில் கட்டுடையைச் சேர்ந்த செ. கயிலாயேந்திரன் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு கட்டுடை விடுதலைப்புலிகள்மக்கள் முன்னணிக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றார்.

ராமஜென்ம பூமி - பாபர் மசூதி பிரச்சினை

# அரசாங்க தீர்ப்பை ஏற்கமாட்டோம்
# நீதிமன்றத் தீர்ப்பையே ஏற்போம்

– பாபர் மசூதி நிர்வாகக் குழு

(புதுடில்லி)

ராமஜென்ம பூமி, பாபர் மசூதி பிரச்சினையில் அரசாங்கம் வழங்கும் எந்த ஒரு தீர்ப்பையும் தாம் ஏற்கப்போவதில்லை என பாபர் மசூதி நிர்வாகக் குழு அறிவித்துள்ளது.

நேற்று முன்தினம் புதுடில்லியில செய்தியாளர்கள் மத்தியில் பேசிய பாபர் மசூதி நிர்வாகக் குழுவின் பேச்சாளர் சையத் சகாப்தீன் இந்தப் பிரச்சினைக்கு அரசாங்கத் தீர்ப்பை ஏற்றுக் கொள்ளாத அதே நேரம் நீதிமன்றத் தீர்ப்பை ஏற்றுக் கொள்ளுவோம் எனத் தெரிவித்தார்.

நீதிமன்றத் தீர்ப்பே தாரீமீக அரசியல் சாசன அங்கீகாரம் பெற்றதாக இருக்கும் எனத் தெரிவித்தார்.

இதேவேளை விஸ்வ ஹிந்து பரிஷத்தின் பொதுச் செயலாளர் குறிப்பிடும்போது தொல்லியல் தகவல் விபரங்களின் அடிப்படையில் இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்றும் நீதிமன்றத் தீர்ப்பை ஆதரிக்க முடியாது என்றும் தெரிவித்தார்.


## THE JAFFNA EDUCATION CENTER
யாழ்ப்பாணக் கல்வி நிலையம்
(சாந்தி சினிமா முன்பாக மேல்மாடியில்)

O/L. A/L I. A. B.
Spoken English, Shorthand,
Typing இரு மொழிகளிலும் நடைபெறுகின்றன.

* பெண்களுக்கு விடுதி வசதியுமுண்டு.
* தனித்துவம் வாய்ந்த ஆசிரியர்களினால் பயிற்றப்படும்.

(B, 2000)


## அறிவித்தல்

வட பிராந்திய மூச்சக்கர மோட்டார் வண்டி ஊழியர் சங்கக் கூட்டம் 12 02. 1991 அன்று மாலை 4. 00 மணியளவில் சங்கக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளதால், சகல அங்கத்தவர்களும் தவறாது சமுகம் தருமாறு தாழ்மையுடன் வேண்டப்படுகின்றீர்கள்.

இ. செல்வராசா
செயலாளர்

55, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

(R-1097)

## 3 அதிகாரிகள் பதவி உயர்வு

யாழ்: மாநகரசபை அலுவலகத்திலிருந்து பதவி உயர்வு இடமாற்றம் பெற்று மூன்று அதிகாரிகள் வெளியேறவுள்ளனர். இவர்களில் ஒருவர் வேலைப் பகுதியில் இருந்தும் மற்றைய இருவரும் ஸ்தாபக பகுதியிலிருந்தும் இடமாற்றம் பெற்றுள்ளனர்.

வேலைப் பகுதியிலிருந்து எஸ். பத்மநாதன் என்பவர் வவுனியா மாநகரசபைக்கும் ஸ்தாபகப் பகுதியிலிருந்து எஸ். பாலேந்திரா நல்லூர் பிரதேசசபைக்கும் எஸ் பாலசுப்பிரமணியம் சுன்னாகம் நகரசபைக்கும் மாற்றம் பெற்றுள்ளனர். (லோ)

## 7ஆம் நாள் நினைவஞ்சலி



### வீரவேங்கை அருள்
### (பொன்னையா விஜயசேகரம்)

தாயின் மடியில்: 23 - 9 - 1973

வீரமரணம்: 6 - 2 - 1991

செங்களம் பலகண்ட சீறும் வேங்கை நீ
அருளே உன்னாற்றல் அணையாத ஒளிவிளக்கு
சிறுமையிருள் உன்னொளியில் சிதறி விரைந்தோடும்
தமிழ் மறவர் ஆயிரவர் உன் பணியில் தொடர்ந்திடுவர்
வீரம் என்றும் வீழ்வதில்லை
வேங்கைகள் என்றும் சாவதில்லை.

இவருடன் மண்மீட்பில் வீரமரணம் அடைந்த ஏனைய போராளிகளுக்கும் எமது நினைவு அஞ்சலிகள்

நாவற்குழி சந்தி,
கைதடி

குடும்பத்தினர்.
(B/2001)

## கோயிலில் திருட்டு

(செ. த. மை)

நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார் கோவில் கதவுகள் உடைக்கப்பட்டு, அறுபதினாயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

கடந்த வெள்ளியன்றிரவு இத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றது.

இவ்வாலயத்தின் கதவுகளை உடைத்து உள்ளேபுகுந்த திருடர்கள் ஆதிமூலத்திலிருந்த பிள்ளையார் விக்கிரகத்தை தூக்கி அருகில் ஓரிடத்தில் வைத்துவிட்டு பெறுமதிமிக்க இயந்திரத்தகடு, அணிகள், தங்கநகைகள் ஆகியவற்றையும் கோயில் களஞ்சியத்தினுள் இருந்த 30லீற் தேங்காயெண்ணையையும் திருடிச்சென்றுள்ளார்களாம். மேலும் கோயிலில் உள்ள சிவன், அம்மன், முருகன் ஆகிய விக்கிரகங்களும் புரட்டப்பட்ட நிலையில் கிடந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## நினைவு கூருகின்றோம்

### பெப்ரவரி 11

1986 ஆம் ஆண்டு இலுப்பையடிச் சேனையில் விசேட அதிரடிப்படையின் திடீர்த்தாக்குதலின்போது வீரமரணமடைந்த

வாணன் (பன்குடாவெளி)

பாலன் (இலுப்பையடிச்சேனை)

987 இல் கட்டுவனில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்தபோது வீரமரணமடைந்த

வெள்ளை (நெல்சன் றெஜினோல்ட் - வெற்றிலைக்கேணி)

லிங்கம் (ப. அமிர்தலிங்கம் - கந்தரோடை)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

அன்றைய நாளில்
எம்முடன் நீவீர்
ஆனந்தக்களிப்பில்
மிதந்து கிடந்ததை,
ஆனதுயரும் சோகமும்
கவலையும் கூட
மனங்களுக்குள்ளே
பகிர்ந்து கொண்டதை
நினைவில் கொள்கிறோம்
பாதையில் தொடர்கிறோம்

– விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B-1990)

★ சிந்தனைக்கு ★

சட்டத்தைப்பற்றி எனக்கென்ன கவலை
என்னிடம்தான அதிகாரம் இருக்கிறதே?

கொர்னீயஸ் வெண்டர்வில்ட்

ஈழநாதம்

31, மக்கந்தோ வீதி யாழ்ப்பாணம் 11-02-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025 - 2839 நிர்வாகபீடம்: 2258
த.பெ.எண் 84

# எங்கிருந்து வருகின்றதோ அதைப் பொறுத்தே மரியாதை

இலங்கைத்தீவின் பல்வேறு பாகங்களில் இருந்தும் சிறிலங்கா அரசாங்கத்தின் மனித உரிமைகள் மீறல் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் உலகின் பல்வேறு பாகங்களுக்கும் பல்வேறு மட்டங்களுக்கும் செல்கின்றன.

இலங்கையின் தென்பகுதியில், கொலை செய்யப்பட்ட காணாமற்போன ஆயிரக்கணக்கான இளைஞர்களின் நினைவாக 19ஆம், 21ஆம் திகதிகளில் பெரும் ஆர்ப்பாட்டங்களை நடத்த அன்னையர் முன்னணியினர் ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது. அதேவேளை சிறிலங்கா பாதுகாப்புப் படைகள் உசார்படுத்தப் பட்டுள்ளன.

பாராளுமன்றத்தில் கொலை செய்யப்பட்ட பத்திரிகையாளர் ரிச்சாட் டிசொய்சாவின் கொலை தொடர்பாக பாராளுமன்ற விசாரணை நடத்தவேண்டும் எனக் கொண்டுவரப்பட்ட தீர்மானம் அரசாங்கம் எதிர்த்து வாக்களித்ததினால் தோல்வி அடைந்துள்ளது.

மேலும் மன்னார் மாவட்டத்தில் உள்ள ஐக்கிய நாடுகள் சபை பராமரிக்கும் அகதி முகாமிற்குள் சிறிலங்கா இராணுவம் அத்துமீறிப் பிரவேசிப்பதாக ஐ. நா. சபை அதிகாரிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் என்பன வெளிநாடுகளின் உணவுப் பொருள்களை ஏற்றிவந்தபோது சிறிலங்கா விமானப்படை தாக்குதல் செய்துள்ளதாக முறையீடுகள் செய்யப் பட்டுள்ளன.

வடக்கு-கிழக்கில் மேற்கொள்ளப்படும் கண்மூடித்தனமான தாக்குதல்கள் குறித்து உள்நாட்டு, வெளிநாட்டு தொண்டர் ஸ்தாபனங்கள் சிறிலங்கா விமானப் படை உயர் அதிகாரிகளை இரத்மலானையில் சந்தித்து தமது கண்டனத்தைத் தெரிவித்துள்ளனர்.

இவற்றோடு தமிழ் மக்கள் தரப்பில் இருந்தும் பல மகஜர் பல பகுதிகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளன. கடந்த மாதம் வல்வெட்டித்துறை மீது சிறிலங்கா விமானப் படையினரின் கண்மூடித்தனமான தாக்குதல் பற்றி ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்திற்கும், அணிசேரா நாடுகளின் தலைவருக்கும், பொதுநலவாய நாடுகளின் செயலாளருக்கும் வல்வை பிரஜைகள் குழு மகஜரொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சிறிலங்கா அரசாங்கம் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பிரகடனத்தை மதித்து நடக்கவில்லை என யாழ். பிரஜைகள் குழு சிறிலங்கா ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்வாறாக, இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவதாக ஆதாரங்கள் கண்டனங்கள் ஆட்சேபனைகள் தெரிவிக்கப்படுகின்ற போதிலும் இதனால் பயனேதும் ஏற்பட்டதாகவில்லை. அவ்வாறு ஏற்படுவதற்கான வாய்ப்பும் இல்லை.

ஏனெனில் இவ்வாறு முறையீடுகள் செய்யப்பட்டுள்ள ஐ.நா. ஸ்தாபனமோ அல்லது ஏனைய மனித நேய ஸ்தாபனங்களோ பொருளாதார ரீதியாகவும், அரசியல், இராணுவ ரீதியிலும் பல நிலையற்றவை. இதனால் இவற்றின் கண்டனங்களையோ எதிர்ப்பையோ எந்த நாடுகளும் பெரிதாகக் கருத்திற் கொள்வதில்லை.

அதேவேளை பொருளாதார பலமுள்ள சர்வதேச நாணய நிதியமோ (ஐ. எம். எவ்). உலக வங்கியோ இவ்வாறான கண்டனங்களை அநேகமாகத் தெரிவிப்பதில்லை. அத்தோடு இந்த நிறுவனங்கள் ஏகாதிபத்திய நாடுகளின் செல்வாக்கிற்கு உட்பட்டிருப்பதினால் பெருமளவில் அவற்றின் அரசியல் தீர்மானங்களுக்கு ஏற்பவே செயற்படுகின்றன.

இந்த நிலையில், செல்வந்த நாடுகளின் ஆதிக்கப் போட்டிகள், விருப்பு வெறுப்புக்கள் என்பவும், மனித உரிமைகளை மீறும் மூன்றாம் உலக நாடுகளின் உறவுகளுமே மனித உரிமை மீறல்களைக் கட்டுப்படுத்தக் கூடியவையாகும். ஆனால் மனித உரிமைகளை மீறும் சிறிலங்கா போன்ற நாடுகள் செல்வந்த நாடுகளுக்கு இசைவாக நடந்து கொள்வதை வெளியுறவுக் கொள்கையாகக் கொண்டுள்ளன; இதனால் இந்த நாடுகளின் நடவடிக்கைகளுக்கு பலமுள்ள நிறுவனங்களும் நாடுகளும் ஆதரவாகவே செயற்படுகின்றன; இதனால் பொருளாதார இராணுவ பலமற்ற நிறுவனங்களின் கண்டனங்கள் பலமான தாக்கம் எதையும் அடக்குமுறை ஆட்சியாளர்கள் மீது ஏற்படுத்தி விடப்போவதில்லை. ஆகையினால் அடக்குமுறை ஆட்சியாளர் மீது மக்களின் பலமான எதிர்ப்பு போராட்டமே எப்பொழுதும் தாக்கத்தை விளைவிக்கக் கூடியதாகும்; இதுவே வரலாறு உணர்த்தும் பாடமுமாகும்;

# அமெரிக்காவின் 'பாலைவனப் புயலுக்கு' ஸ்கட் ஒரு அச்சுறுத்தலா

ராஜா பாபு

ஃபோக்லண்ட் தீவுகளை மீட்கச் சென்ற பிரிட்டிஷ் கப்பல் படைக்கு ஆர்ஜென்டீனா வைத்திருந்த பிரெஞ்சு தயாரிப்பு 'எக்ஸோசிஸ்ட்' (Exorcist ஏவுகணைகள் பெரும் தலையிடியை கொடுத்தன

ஈரான் - ஈராக் போரில் ஈரான், ஹோர்மஸ் நீரிணையில் நட்டு வைத்திருந்த சீனத் தயாரிப்பு 'சில்க்வோம்' (Silkwarm) ஏவுகணைகள், அந்த நீரிணை ஊடாகச் செல்லும் எண்ணெய்த் தாங்கிகளுக்கு பெரும் அச்சுறுத்தலாக இருந்தன.

ஆப்கானிஸ்தானில், முஜாஹிதீன்கள் பயன்படுத்திய அமெரிக்கத் தயாரிப்பு ஸ்டிங்கர்' (Stinger) ஏவுகணைகள் சோவியத் விமானப் படைக்கு மோசமான இழப்புக்களை ஏற்படுத்தின.

அதேபோல, இப்பொழுது வளைகுடாவில் அமெரிக்காவுக்கும் அதன் நேசநாடுகளுக்கும் சிம்மசொப்பனமாக இருப்பவை சோவியத் தயாரிப்பு ('ஸ்கட்' ,Scud) ஏவுகணைகள்தான்.

ஒவ்வொரு 'ஸ்கட்' ஏவுகணையும் கிட்டத்தட்ட பதினொரு மீற்றர் உயரமானது; அரை மெட்ரிக் தொன் வெடிமருந்துகளை காவிக்கொண்டு முந்நூறு கிலோ மீற்றர் வரை பாயக்கூடியது.

இந்த ஏவுகணைகள் மிகவும் உயரமாகச் சென்று, குறிப்பிட்ட இலக்கின் மீது விழுந்து வெடிப்பதால், ஒரு நவீன ரேடார் (Radar) மூலம் இவற்றை சுலபமாக அடையாளம் காணலாம்.

எனவேதான், 'பேற்றியட்' (Patriot) ஏவுகணை எதிர்ப்பு வாணங்கள் Anti- Missile Ros kets) மூலம் இவற்றை சுட்டு வீழ்த்தக் கூடியதாகவுள்ளது

இந்த 'ஸ்கட்' ஏவுகணைகளைக் கொண்டு ஒரு இலக்கை துல்லியமாகத் தாக்க முடியாது. குறிப்பிட்ட இலக்கை விட்டு கிட்டத்தட்ட ஆயிரம் மீற்றர்கள் வரை முன்னாலோ அல்லது பின்னாலோ இவை விழுந்து வெடிக்கலாம்.

வளைகுடாவில் நிலை கொண்டுள்ள அமெரிக்க யுத்தக் கப்பல்களில் இருந்து ஏவப்படும் 'ரொமஹோக்' (Tomahawk) மற்றும் நீர்மூழ்கிகளில் இருந்து ஏவப்படும் 'ஸிலாம்' (Slam) ஏவுகணைகளுடனோ அல்லது பிரிட்டிஷ் கப்பல் படையிடம் உள்ள 'ஹார்பூன்' (Harpoon) ஏவுகணைகளுடனோ ஒப்பிடும்போது, இந்த 'ஸ்கட்' ஏவுகணைகள் அப்படி ஒன்றும் பயங்கரமானவை அல்ல.

'ரொமஹோக்' ஏவுகணைகள் தாரை இயந்திரம் (Jet-Enqine) பொருத்தப்பட்டு, சிறிய விமானத்தைப் போல் பறந்து, சொன்ன இலக்கை தேடிச்சென்று தாக்கவல்லவை. இவற்றின் உயர் வீச்சு 7 500, கிலோ மீற்றர்கள். இவை தாழ்வாக பறப்பதால், ரேடாரில் சிக்காமல், எதிரியின் பாதுகாப்பு பிரதேசத்துக்குள் ஊடுருவக் கூடியவை. இவற்றின் இயக்கம், ஏவப்பட்ட போர்க்கப்பலில் உள்ள கம்பியூட்டர்களால் கட்டுப் படுத்தப்படுவதால், இலக்கை மிகவும் துல்லியமாகத் தாக்கும் திறன் கொண்டவை இந்த ஏவுகணை தாக்குதலுடனேயே வளைகுடாப் போரை பன்னாட்டுப்படைகள் தொடங்கின;

ஒரு மின்னணுப் போர் முறையில் (Electronie Warfare) கைதேர்ந்த பன்னாட்டுப் படைகள், இந்த 'ஸ்கட்' என்றாலே ஏன் நடுங்கி நடுங்கிப் போகிறார்கள்?

இந்த 'ஸ்கட்' ஏவுகணைகளின் போர்த்தலைகளில் (War-Heads) ஈராக் இரசாயன, நுண் உயிரியல் அல்லது அணு ஆயுதங்களை பொருத்தி தாக்குதல் நடத்தினால் அதன் விளைவுகள் பாரதூரமானவையாக இருக்கும்; இதற்காகவே பன்னாட்டுப் படைகள் அஞ்சி வருகின்றன.

தவிர சோவியத் யூனியனிடம் இருந்து வாங்கிய ஸ்கட்' ஏவுகணைகளின் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, முறையே 600, 900 கிலோ மீற்றர் வரை பாயக் கூடிய 'அப்பாஸ்' (Abbas) 'சதாம்' (Sadham) எனப்படும் இரண்டு ஏவுகணைகளையும் ஈராக்கிய இராணுவ பொறியியலாளர்கள் உருவாக்கி இருக்கிறார்கள்; இவை ஏவப்படுவதற்கு 'ஸ்கட்' டைவிட குறைவான எரிபொருளே தேவைப்படுகிறது. ஆகவே இவை பாரம் குறைந்தவை தற்போது இஸ்ரேலைத் தாக்கும் ஏவுகணைகள் இந்த இரண்டில் ஒன்றாகவே இருக்கவேண்டும்.

## இன்று படைப்புக்களை உருவாக்காத

# கலைஞர்களை எதிர்காலச் சந்ததி மன்னிக்க மாட்டாது - ஆஞ்சநேயர்

(பருத்தித்துறை)

"இன்றைய காலகட்டத்திலே எழுத்தாளர், கலைஞர்கள் சமுதாயத்திற்குத் தேவையான படைப்புகளைப் படைக்கத் தயங்கி ஒதுங்குவார்களேயானால் அவர்களை எதிர்காலச் சந்ததியினர் மன்னிக்க மாட்டார்கள். எழுத்தாளர் கலைஞர்கள் சமுதாயத்தின் முதுகெலும்பானவர் போராட்டகாலங்களில் அக்காலத்தேவைகளுக்கேற்ப எழுத்தாளர் கலைஞர்கள் ஆக்கங்களை உருவாக்கவேண்டும். எழுத்தாளர் கலைஞர்களால் சமுதாயத்தில் பலசாதனைகளை நிலைநிறுத்த முடியும்"

இவ்வாறு, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலே நடைபெற்ற வடமராட்சி எழுத்தாளர், கலைஞர்களுக்கான கலந்துரையாடலிலே உரையாற்றிய விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி யாழ். மாவட்ட பிரசாரப் பொறுப்பாளர் திரு ஆஞ்சநேயர் குறிப்பிட்டார். கலந்துரையாடலுக்கு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி வடமராட்சி அரசியல் பொறுப்பாளர் திரு நகுலேஸ் தலைமை தாங்கினார். தொடர்ந்து உரையாற்றிய திரு. ஆஞ்சநேயர் குறிப்பிட்டதாவது.

தமிழீழ விடுதலைப் புலிகள் தலைமை தமிழீழத்தில் வளர்ச்சிமிக்க ஒழுக்கமான நாகரிகமான சமுதாயம் உருவாக வேண்டும் என்பதையே விரும்பி எதிர் பார்க்கிறது; நாளை மலரப் போகும் தமிழீழத்தில் நாகரிக சமுதாயத்தை உருவாக்குவதில் எழுத்தாளர், கலைஞர்களின் பங்கு மிக முக்கியமானதாகும் இந் நிலையிலே எழுத்தாளர், கலைஞர்கள் தமது பணியிலிருந்து ஒதுங்கியிருந்து விடக்கூடாது. அவ்வாறு ஒதுங்குவார்களேயானால் அது வரலாற்றுத் தவறாகும். அதை எதிர்காலச் சந்ததியினர் மன்னிக்க மாட்டார்கள்

எழுத்தாளர், கலைஞர்கள் சமுதாயத்தின் முதுகெலும்பு போன்றவர்கள் தமிழ் சமுதாயத்தை நல்வழிப்படுத்தி உயர்வடையச் செய்வதில் எழுத்தாளர், கலைஞர்கள் முக்கியமானவர்கள் உயிரோட்டமான சமுதாய அமைப்பை ஏற்படுத்தி அதைச் சிறப்பாக இயங்கச் செய்வதில் எழுத்தாளர், கலைஞர்கள் தனித்துவம் கொண்டவர்கள் என்பதனாலேயே அவர்களின் பணிகள் புனிதமான பணியாகக் கொள்ளப்படுகின்றது. போராட்ட காலங்களிலே அக்காலத்தின் தேவைகளுக்கேற்ப தமது ஆக்கங்களை உருவாக்க வேண்டும். அவர்களுக்கு எந்த விதமான கட்டுப்பாடுகளும் விதிக்கப்படவில்லை சமுதாய எழுச்சியிலே பல அரிய சாதனைகளை நிலை நாட்டக் கூடியவர்கள்;

திட்டமிட்ட தமிழின அழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள ஸ்ரீலங்கா அரசு தமிழீழ கலை, கலாசாரங்களைச் சீரழித்து பொருளாதார வளத்தை நிர்மூலமாக்கி தமிழினத்தை அழித்துவிட மேற்கொண்டு வரும் பகீரதப் பிரயத்தனங்கள் யாவும் தோல்வியைத் தழுவி வருவதற்குக் காரணம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குத் தமிழீழ மக்கள் வழங்கும் பூரண ஆதரவே யாகும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையின் தீர்க்க தரிசனமும் விடுதலைப் புலிகளின் வளர்ச்சியும், விடுதலைப் போராட்டத்தின் பலமும் இன்று ஸ்ரீலங்கா அரசை மாத்திரமன்றி சர்வதேசத்தையுமே அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளன. விடுதலைக்காக விடுதலைப் போராட்டத்தை தொடர்ந்து வரும் நாங்கள் இன்று தமிழீழ விடுதலை இலட்சியத்தின் வெற்றியின் விளிம்பிலே நின்று கொண்டிருக்கின்றோம் கடந்த ஏழு மாதங்களாக நாம் மேற்கொண்டு வரும் விடுதலைப் போராட்டம் ஸ்ரீலங்கா அரசிற்கு மாத்திரமன்றி சர்வதேச ரீதியாகவும் பல பிரச்சினைகளை உருவாக்கியுள்ளன; எமது விடுதலைப் போராட்டத்தின் வெற்றி வெகு தூரத்தில் இல்லை என்று தமது உரையில் தெரிவித்தார். இக்கலந்துரையாடலில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி கலைகலாசாரப்பகுதி முக்கிய உறுப்பினர் தேனீ கனகரத்தினம் ஆகியோரும் கலந்து கொண்டு உரையாற்றினர்;

# அமெரிக்காவின் நடவடிக்கை ஐ. நா. வரம்பை மீறியதாகும்

## -கொர்பசேவ்

(மொஸ்கோ)

''வளைகுடாவில் அமெரிக்க தலைமையிலான கூட்டுப் படைகளின் இராணுவ நடவடிக்கையானது குவைத்தை விட்டு ஈராக்கை வெளியேற்றுவது என்னும் ஐ. நா. சபையின் ஆணையை வரம்பு மீறுவதாக உள்ளது'' என சோவியத் யூனியனின் ஜனாதிபதி கொர்பசேவ் எச்சரித்துள்ளார்.

நேற்று முன்தினம் வளைகுடா நிலைமை குறித்து கருத்துத் தெரிவித்த கொர்பசேவ் இந்தப் போர் கை மீறப்போகும் அபாயம் இருக்கிறது என்று எச்சரித்துள்ள அதேநேரம் ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைனுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக தனது சிறப்புத் தூதுவர் ஒருவரை ஈராக்கிற்கு அனுப்பப்போவதாகவும் கூறினார்.

இதேவேளை சோவியத் ஜனாதிபதி ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைன் யதார்த்தமாக சிந்தித்து தமது நாட்டின் உண்மை நிலையை உணர வேண்டும் என்றுவேண்டுகோள் விடுத்துள்ளார்.

## லித்வேனியாவில்

# சுதந்திரக் குடியரசு அமைய 90 வீதமான மக்கள் ஆதரவு

(மொஸ்கோ)

லித்வேனியக் குடியரசு, சோவியத் யூனியனின் சட்ட வரம்புகளுக்குப் புறம்பாகச் செயற்படுவதாகவும், நேற்று முன்தினம் லித்வேனியாவில் இடம்பெற்ற அபிப்பிராய வாக்கெடுப்பு சட்டபூர்வமற்றது என்றும் சோவியத் அதிபர் கோர்பசேவ் அறிவித்துள்ளார்.

சோவியத் அரசின் உத்தரவை மீறிச் சுமார் 84 சதவீத மக்கள் வாக்களிப்பில் கலந்து கொண்டதாகத் தெரியவருகிறது. லித்வேனியா சுதந்திரக் குடியரசாக வேண்டுமென சுமார் தொண்ணூறு சதவீதமானோர் விரும்புவதாக அபிப்பிராய வாக்கெடுப்பின் முதற்கட்ட முடிவுகள் தெரியப்படுத்துகின்றன.

எனினும் சோவியத் அரசு வாக்களிப்பு விவகாரத்தில் தலையிட்டதாக எந்தத் தகவலும் வெளிவரவில்லை. லித்வேனிய அபிப்பிராய வாக்கெடுப்பின் முடிவுகள் இன்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவுள்ளன.

## இஸ்ரேலில் உளவுக் குழு

இஸ்ரேலில் உளவு பார்க்கும் குழுவொன்று பிடிபட்டுள்ளதாக இஸ்ரேல் பொலிசார் அறிவித்துள்ளனர்.

பக்தாத்துக்கு தகவல் அளிக்கும் பத்து அரபு இஸ்ரேல் நபர்கள் இஸ்ரேல் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஈராக் ஏவுகணைத் தாக்குதல்களினால் ஏற்படும் சேதங்களைப் படம்பிடித்து அனுப்புவதில் இவர்கள் ஈடுபட்டிருந்ததாகக் கூறப்படுகிறது.

சிறுவன்

யாடிக் கொண்டிருக்கையில் திடீரென அப்பொருள் வெடித்ததன் காரணமாக வயிற்றில் பலத்த காயமேற்பட்ட நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (85)

தட்டக்கல்லில

மூக்கு சிறிலங்கா இராணுவத்தினர் செல்வாயில் தட்டக்கல் என்னுமிடத்தில் வைத்து விடுதலைப்புலிகள் இளம்போரிகள் தாக்குதல் மேற்கொண்டனர். இத் தாக்குதலில் இராணுவத் தரப்பில் பலத்த சேதமேற்பட்டது. எண்ணிக்கைவிபரம் தெரியவில்லை. (மு)

மகனை

படுகாயமுற்ற நிலையில் வந்திருந்த கே. சிவகுனம் என்பவர் தெரிவித்தார். மேலும் அவர் கூறுகையில் இராணுவம் திடீரென திமுர துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்ததால் பலர் சிதறி ஓடினர் எத்தனைபேர் குண்டுக்கிரையாகினர் என்று தெரியவில்லை என்றார்.

இதேபோல தனது தாயுடன் கொழும்பு சென்ற நெல்லியடியைச் சேர்ந்த சிறுமி ஜெ அஜந்தா கூறும்பொழுது நாங்கள் நடந்து போய்க் கொண்டிருந்தபோது ஆமிக்காரங்கள் சுடுசுடுஎன்று சுட்டார்கள்; என்னுடைய அண்ணாவின் மூக்கினாலும், வாயினாலும் இரத்தம் பாய்ந்தது; அம்மா அண்ணாவையும் தூக்கிக்கொண்டு ஓடிவந்தா. இடையில் அண்ணா செத்துவிட்டார் என்று அம்மா ரோட்டு கரையில் அண்ணாவை கிடத்திப் போட்டு ஓடிவந்திட்டா என்ர அண்ணாவுக்கு என்ன நடந்ததோ தெரியாது என்று அழுதாள் அந்தச் சிறுமி. (வே)

சொய்ஸா

வாசுதேவநாணயக்கார தெரிவித்தார்.

உரத்தகுரலில் ஆவேசமாகப் பேசிய வாசுதேவநாணயக்கார இச்சர்வதேச ஆணைக்குழுவை நியமிக்கும் பிரேரணைகளைப் பாராளுமன்றத்தில் கொண்டுவரவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பண்டிகை

அரசாங்கத்திடம் முறையீடு செய்துள்ளன.

தோட்டத் தொழிலாளரின் வரலாற்றில் எந்தமிலத நடவடிக்கை இதுவென்றும் பெருநாள் முற்பணத்தைக் கொடுத்துவிட்டுத்தான் அத்தொகையை தவணை அடிப்படையில் கழித்துக்கொள்வது வழக்கம் இது அதற்கு முற்றிலும் எதிரான நடவடிக்கை என்றும் தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் தெரிவித்துள்ளார்.

ஈழத்து நூல்கள்

ராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். டி. வை கலாலா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த மாதம் யாழ்ப்பாணத்தில் நடைபெற இருக்கும் சனசமூக நிலையங்களின் சம்மேளன வைபவத்தில் அனைத்து எழுத்தாளர்களையும் கலந்து கொள்ளவும் அழைப்பு விடுக்கிறேன், என்னிடம் 856 தமிழ் எழுத்தாளர்களின் முகவரிகள் உள்ளன. அவர்களுக்கெல்லாம் தபால் மூலம் அழைப்பு விடுக்கும் வாய்ப்புகள் இல்லாததனால் இந்தச் சந்தர்ப்பத்தில் அந்த அழைப்பை விடுக்கின்றேன். (81)

## ஐ. நா. சபை கவனிக்கவேண்டும்;

# குவைத்தை விடுவிக்க மட்டுமே இராணுவ நடவடிக்கைகள்

(டில்லி)

ஈராக்கிடமிருந்து குவைத்தை விடுவிக்கும் பணியில் மட்டுமே இராணுவ நடவடிக்கைகள் இடம்பெறுவதை ஐ. நா. சபை பார்த்துக்கொள்ள வேண்டுமென இந்திய பாதுகாப்புச் சபையிடம் வலியுறுத்தியுள்ளது என இந்திய வெளியுறவு அமைச்சர் வி. சி. சுக்லா வெளியுறவு அமைச்சின் ஆலோசனைக் கமிட்டிக் கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார்.

மேலும் ஈராக்கில் மக்களின் உடைமைகள் நாசப்படுத்தப்படுவது குறித்து கவலை வெளியிட்ட சுக்லா ஈராக்கின் கட்டடங்களையும், தொழில்நுட்ப கேந்திரங்களையும் அழிப்பது ஐ நாவின் நோக்கமல்ல என்றும் குறிப்பிட்டார்.

இரசாயன ஆயுதங்களோ, அணு ஆயுதங்களோ பயன்படுத்தப்படுவதை இந்தியா உறுதியாக எதிர்க்கும் எனவும் தெரிவித்தார்.

பாலஸ்தீன இலட்சியத்தில் காலங்காலமாக இந்தியா கொண்டுள்ள கடமைப்பற்றில் இருந்து ஓர் அங்குலம் தானும் விலகவில்லை எனவும், சில உறுப்பினர்கள் அணு ஆயுத இரசாயன ஆயுதப் பிரயோகம் குறித்து கொண்டுள்ள சந்தேகம் நியாயமானதே என்றும் கூறினார்.

தரை

பி. தொலைக்காட்சி அறிவித்துள்ளது.

அதேவேளை கூட்டுப்படையினரின் போர் நடவடிக்கைகளை நேரில் கண்டறிய சவூதி அரேபியா வந்திருந்த அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் டிக் செனி பத்திரிகையாளரிடம் பேசும்போது இருபத்தைந்து நாள் இடைவிடாத தாக்குதல் மேற்கொண்டும் ஈராக் இராணுவத்தின் பெரும்பகுதி சற்றும் பாதிப்பின்றி உள்ளதாகத் தெரிவித்தார். அதேவேளை உலகின் நான்காவது பெரிய இராணுவமாக இருந்த ஈராக் இராணுவம் இன்று அந்நிலையில் இல்லை எனவும் குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில் போர் நிறுத்தத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்ததோடு தரைச் சண்டை உடன் ஆரம்பிக்காது எனவும் தெரிவித்த அதேவேளை இறுதி முடிவுகளை ஜோர்ஜ் புஷ் எடுப்பார் எனவும் தெரிவித்தார்.

அதேவேளை ஈராக் மீது தரைவழித் தாக்குதலைக் கடந்த ஐந்தாம் திகதி ஆரம்பிக்க இருந்த கூட்டுப்படைகள் சவூதி-குவைத் எல்லையில் ஈராக் மேற்கொண்டிருந்த பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கண்டு கைவிட்டுவிட்டதாக எகிப்திய பத்திரிகை ஒன்று தெரிவிக்கின்றது.

சவூதி-குவைத் எல்லையில் 10 கிலோமீற்றர் இடைவெளியில் மூன்று தடுப்புச் சுவர்கள் அமைக்கப்பட்டிருந்ததாகவும் அந்தச் சுவர்களின் முன் 50 மீற்றர் நீளத்திற்கு கூர்மையான முட்கம்பிகள் கட்டப்பட்டிருந்ததாகவும் அந்தப் பத்திரிகை தெரிவித்தது. மேலும் ஐந்து மீற்றர் ஆழத்திற்கு பெற்றோல் நிரப்பப்பட்ட அகழிகள் தோண்டப்பட்டிருந்ததாகவும் அவற்றிற்குப் பின்னர் லட்சக் கணக்கில் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கின்றது. மேலும் அந்தப் பத்திரிகை தெரிவிக்கையில் இப் பாதுகாப்பு ஏற்பாடுகளின் பின்னாலேயே ஈராக்கிய டாங்கிகளும், பீரங்கிகளும் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

## மட்டக்களப்பு மாவட்டத்தில்

# விவசாய மீன்பிடி தொழில்களால் 250 மில்லியன் ரூபா நட்டம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த ஜூன் மாதத்திற்குப் பின்னர் விவசாய மீன்பிடித்துறைகளால 250 மில்லியன் ரூபா (25 கோடி) வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது என புள்ளிவிபரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த காலங்களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்ட வன்செயல் சம்பவங்களினால் தொழிற்துறைகள் பாதிக்கப்பட்டது தெரிந்ததே.

அத்துடன் இலங்கையில் அதிகளவு நெல் உற்பத்தியை பெற்றுத்தரும் மாவட்டங்களில் மட்டக்களப்பு முதலிடம் வகிக்கின்றது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

## உழுந்தில் டி.டி.ரி. கலப்படம்

(யாழ்ப்பாணம்)

விற்பனை செய்யப்படும் உழுந்தில் டி. டி. ரி. இரசாயனப் பொருள் கலக்கப்பட்டுள்ளதாக பாவனையாளர்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர். அறுவடை செய்துள்ள உழுந்தினை வண்டுகள், பூச்சிகள் தாக்கக் கூடாதென்பதற்காக இந்த இரசாயனப் பொருள்கள் கலக்கப்படுவதாகவும் இதனை வியாபாரிகளோ, விவசாயிகளோ செய்கிறார்கள் என்பதை அறியமுடியாதிருப்பதாகவும் தெரிகிறது.

# 25 ஆம நாள் வளைகுடாப் போர்

★ வளைகுடாவில் தரைத் தாக்குதலுக்கு ஆயத்தமாக ஏறத்தாழ 40,000 தொன் வெடிமருந்துகளும் 31 லட்சம் டன்னுக்கும் கூடுதலான எரிபொருட்களும் குவைத்தின் எல்லைக்கருகே கொண்டுபோய்ச் சேர்த்திருப்பதாக பிரித்தானிய படைகளின் தளபதி தெரிவித்தார்.

★ ஈராக்கிய எல்லையில் அதன் ராடார் நிலையை அமெரிக்க ஹெலிகொப்டர் தாக்கி அழித்ததாக சவூதி அரேபியா தெரிவித்தது.

★ ஈரானின் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்திய ஈராக்கிய துணைப்பிரதமர் சதூன்ஹமாடி நேற்று முன்தினம் ஜோர்தானுக்குச் சென்றுள்ளார். இவர் ஜோர்தானிய மன்னர் ஹுசைனுடன் ஆலோசனை நடத்தியதாக ஜோர்தான் வானொலி தெரிவித்தது.

★ அணிசேரா நாடுகளின் அமைச்சர்கள் நாளை செவ்வாய்க்கிழமை பெல்கிரேட்டில் சந்தித்து வளைகுடா சமாதான முயற்சி குறித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

★ ஈராக்மீது நேற்று முன்தினம் கூட்டுப்படைகள் 342 முறை விமானத் தாக்குதல்களை மேற்கொண்டதாக பாக்தாத் வானொலி அறிவித்தது. அத்துடன் ஈராக்கின் நசிரியா என்ற நகரம்மீது கூட்டுப்படையினர் நடத்திய தாக்குதலில் 100 பேர் இறந்துள்ளனர் என்றும் பாக்தாத் வானொலி அறிவித்தது.

★ ஈராக்கின் விமான பாதுகாப்புப் படைகளின் தளபதியும், விமானப்படைத் தலைவரும் பாக்தாத் நகரில் உயிரோடிருப்பதாக பென்டகன் அதிகாரி றியர் அட்மிரல் மக்கொனல் தெரிவித்துள்ளார்.

பாக்தாத் தெருக்களில் இவர்கள் நடந்து செல்வதனை நேரில் காணக்கூடியதாயிருந்ததாகவும் பென்டகன் நிருபர் மகாநாட்டில் மேலும் அவர் தெரிவித்தார். இப்படைத் தலைவர்களுக்கு சதாம் ஹுசைன் மரணதண்டனை விதித்ததாக சோவியத் இன்டர்பாக்ஸ் தெரிவித்திருந்தது. இவர்களின் மரண தண்டனையைத் தொடர்ந்தே ஈராக் விமானங்கள் ஈரானிற்குச் சென்றதாக செய்தி பரவியிருந்தது தெரிந்ததே.

★ ஈராக் மீதான வான்தாக்குதல்கள் நிறுத்தப்படாதவரை போர்க் கைதிகளைப் பார்வையிட சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தை நாட்டுக்குள் அனுமதிக்கப்போவதில்லை என ஈராக் அறிவித்துள்ளது.

விமானக்

விமானத்தாக்குதலில் வயலில் வேலை செய்துகொண்டிருந்த அன்ரனி டான்ஸன் (16) என்ற இளைஞர் பாதுகாப்புக்கருதி வாய்க்காலுக்குள் குதித்ததால் மூச்சுத்திணறிப் பரிதாபகரமாக மரணமாகியுள்ளார். திருமதி மோ. இந்திராணி (26) இவரது மகள் மோ. தாரணி (6) ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இத்தாக்குதலில் ஐந்துவீடுகள் சேதமடைந்துள்ளன.

கொக்குவில் நந்தாவில் அம்மன் கோயில் ஒழுங்கையில் குண்டுவீச்சு விமானங்கள் நேற்றுக்காலை 11.30 மணியளவில் நடாத்திய விமானத் தாக்குதலில் எஸ். வரதராசா (41) (மட்டுவில் வடக்கு) என்பவர் காயமடைந்துள்ளார். மூன்று வீடுகள் சேதமாக்கப்பட்டுள்ளன.

மீண்டும் நண்பகல் 12 மணியளவில் குண்டுவீச்சு விமானங்கள் கல்வியங்காடுபழஞ்சந்திப் பகுதியில் நடாத்திய விமானத் தாக்குதலில் மலசலகூடத்தில் பாதுகாப்பிற்காகப் பதுங்கி இருந்த பரமேஸ்வரி செல்லப்பா (60) என்ற வயோதிப மாது உடல் சிதறி மரணமானார்.

இத்தாக்குதலில் இராமசாமி வைத்தியரின் மருந்துவமனையும், இரண்டுவீடுகளும், அந்நிலைய கார், ஐந்து சைக்கிள்கள், பெறுமதியான மருந்து வகைகள் என்பனவும் பலத்த சேதமடைந்துள்ளன.

(85, சு, மு, சே, த, லை)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு பெப்ரவரிமாதம் 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.